DEREK
PRINCE
MINISTRIES - INDIA

Free Copy

நம்பிக்கை

- Part Three



எல்லா நம்பிக்கையின் ஊற்று

வாழ்வின் மிக பெரிய கஷ்டங்களின் மத்தியில், நம்மை ஆறுதல்படுத்தி, விடுதலையாக்கி, எதிர்காலத்திற்கு நம்மை பெலப்படுத்தும் ஒரே சிறிய வார்த்தை உண்டு. அந்த வார்த்தை "நம்பிக்கை" என்பதாகும் - வாழ்க்கையை குறித்து ஒருவருக்கு முழுவதும் புதுமையான பார்வையை ஏற்படுத்தி கொடுக்கக்கூடிய வல்லமையை கொண்ட வார்த்தை.

நம்முடைய உலகில் இன்று, பல கோடி மக்கள் நம்பிக்கையின்மையால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம் - கிறிஸ்தவர்களும் உட்பட. எல்லா நம்பிக்கையையும் இழந்த பின் நீங்கள் என்ன செய்ய முடியும்? அதிர்ஷ்டவசமாக, அந்த முக்கியமான கேள்விக்கு தேவன் ஒரு பதிலை வைத்திருக்கிறார். அதை தான் நம்பிக்கையை குறித்த நம்முடைய ஐந்து பகுதி கொண்ட தொடரின், இந்த மூன்றாம் பாகத்தில் நாம் கண்டடைய போகிறோம்.

என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து, இந்த தொடரில் முன்பு நான் பகிர்ந்துக் கொண்டேன். எல்லா நம்பிக்கையையும் இழந்து, தேவனுடைய உதவி மிகவும் தேவை என்ற நிலை, ஒரு காலக்கட்டத்தில், என் வாழ்விலும் இருந்தது. நல்ல வேளை, நம்முடைய துணையாளரும், தேற்றவாளனுமான பரிசுத்த ஆவியானவர், என்னை தேவனுடைய வார்த்தைக்கு கொண்டு சென்று, அங்கு என்னுடைய தேவையை சந்தித்தார். ஆகையால் தான், கிறிஸ்தவர்கள் உண்மையான நம்பிக்கையை புரிந்து கொண்டு அதில் வாழ வேண்டும் என்ற ஆழ்ந்த கரிசனை எனக்குண்டு. இந்த நிமிடத்தில், நீங்கள் நம்பிக்கையை இழந்துக்கொண்டிருப்பதை குறித்து பயந்தோ, கவலையோடே இருப்பீர்களானால், தயவு செய்து திடன் கொள்ளுங்கள். தேவன் எனக்கு செய்ததை, உங்களுக்கும் செய்வார்! மெய்யான நம்பிக்கை, மீண்டும் உங்கள் உள்ளத்தில் அனல்பெற்று எழும்பும் என்று நான் முழுமையாக விசுவாசிக்கிறேன். எல்லா நம்பிக்கையின் ஊற்று என்ற இப்போதனையை கொண்டு தேவன் அதை உங்கள் வாழ்வில் செய்வாராக.

மூன்று நித்திய நல்லொழுக்கங்கள்

இதுவரை நாம் பார்த்தவைகளை நினைப்பூட்டி, இந்த ஆராய்வின் மூன்றாவது பகுதியை நாம் ஆரம்பிக்கலாம். முதல் இரண்டு பாகங்களில், 1 கொரிந்தியர் 13:13: உள்ள பவுலின் வாக்கியத்தை நாம் உற்று கவனித்தோம்:

> இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது: இவைகளில் அன்பே பெரியது.

நம்முடைய விவாதத்தின் ஒரு பகுதியாக, இம்மூன்றும் நிலைத்திருக்கும் உண்மைகளின் விளைவுகளை குறித்து நாம் பார்த்தோம்: விசுவாசம் கிரியை அல்லது செயலை உற்பவிக்கும்- இல்லாவிடில் அது செத்த விசுவாசமாகும். அன்பு, மற்ற வர்களின் சார்பாக, தியாகமான உழைப்பை உற்பத்தி செய்யும். நம்பிக்கையின் முக்கியமான விளைவுகள் உறுதி, பொறுமை மற்றும் விடா முயற்சியென்று நாம் விசுவாசித்தோம்.

விசுவாசம் மற்றும் நம்பிக்கைக்குள்ள நெருக்கமான

The Teaching Legacy of
DEREK PRINCE

Derek Prince Ministries - India
www.derekprince.in
Issue #018

தொடர்பையும் நான் விளக்கி, அவைகளில் உள்ள முக்கியமான வேற்றுமைகளை நான் வலியுறுத்தி காண்பித்தேன். விசுவாசம், தேவனுடைய வார்த்தையை சார்ந்தது, அது காணப்படாதது; நம்பிக்கையோ விசுவாசத்தை சார்ந்தது. விசுவாசம் தற்காலத்தை சார்ந்தது. அது, இப்போது இங்கே என்ற ஒரு நிச்சயம். நம்பிக்கையோ, மாறாக எதிர்காலத்தை நோக்குகிறது. ஆனால், தற்காலத்திலுள்ள விசுவாசத்தை அடிப்படையாக கொண்டுள்ள நம்பிக்கையே செல்லுபடியாகும். மற்ற எந்த விதமான நம்பிக்கையும் வெறும் ஆவலுள்ள சிந்தை மட்டுமே ஆகும்; அதை நிறைவேறலாம், ஆனால் நிறைவேறும் என்ற எந்த உறுதியும் இல்லை. இந்த குறிப்பை நான் மறுபடியும் கூறுகிறேன்: விசுவாசம் தற்காலத்தில் உள்ளது; நம்பிக்கை எதிர்காலத்தில் உள்ளது.

"நம்பிக்கை என்பது, நன்மை வரும் என்ற அமைதலான, உறுதியான எதிர்பார்ப்பு ஆகும்"

அதற்கு பின், வேதத்தில் கூறப்பட்டிருக்கும் விதமாக, நான் நம்பிக்கைக்கு என்னுடைய தனிப்பட்ட பொருள்விளக்கத்தை முன்வைத்தேன்: நம்பிக்கையென்பது, நன்மை வரும் என்ற அமைதலான, உறுதியான எதிர்பார்ப்பாகும். நம்பிக்கையானது சாத்வீகமும், அமைதலுமானது மட்டுமல்ல, அது தன்நம்பிக்கையுள்ளது. இந்த தன்நம்பிக்கையை குறித்து எபிரெயரின் எழுத்தாளர் குறிப்பிடும் போது, நம்முடைய நம்பிக்கையில் மேன்மை பாராட்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்று கூறுகிறார். (எபிரெயர் 3:6)

நம்பிக்கையின் மையம்

முன்பு பார்த்த போதனைகளில், தற்காலத்திலுள்ள விசுவாசத்தை நம்பிக்கையானது அடித்தளமாக கொண்டிருந்தாலும், அது எதிர்காலத்திலுள்ள ஒன்றின் மேல் மையம் கொண்டதாக அல்லது கவனம் கொண்டதாக இருக்க வேண்டும்? 1 பேதுரு 1:13ல், அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவின் மறு வருகையின் மீது "நம்முடைய நம்பிக்கையை செலுத்தும்படி" கூறுகிறார். எல்லா கிறிஸ்தவ நம்பிக்கையின் இறுதி மையமும் இயேசு கிறிஸ்துவின் மறு வருகை தான். எல்லா உண்மை விசுவாசிகளுக்கு முன்பும் வைக்கப்பட்டிருக்கும் ஆனந்த பாக்கியம் இதுவே. நமக்கு மற்ற குறைவான நம்பிக்கைகளும், கனவுகளும் இருக்கலாம் ஆனால் இதுவே ஒரே நம்பிக்கை.

இயேசு கிறிஸ்துவின் மறு வருகையை நம்முடைய இறுதி மையமாக கொள்வதினால், நம்முடைய வாழ்க்கையில் இரண்டு முக்கியமான விளைவுகள் ஏற்படும். முதலாவது, பரிசுத்தமான விதத்தில் ஜீவிக்க அது நம்மை ஊக்குவிக்கிறது. புதிய ஏற்பாட்டை வாசிக்கும் போது, அப்போஸ்தலனாகிய பவுலும், பரிசுத்த ஜீவியத்திற்கு, தேவனுடைய ஜனத்திற்கும் முன் வைத்த முக்கியமான கட்டளை இதுவே. அது இயேசு கிறிஸ்துவின் மறு வருகையை குறித்ததான எதிர்ப்பார்ப்பு.

இயேசுவின் மறு வருகையை குறித்த இந்த நம்பிக்கையின் இரண்டாவது விளைவு என்னவென்றால், அது காலத்தின் கட்டிலிருந்து நம்மை விடுதலையாக்குகிறது. உலகத்தின் மக்களுக்கு நித்தியத்தை குறித்த பார்வையில்லை - அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள குறுகிய காலம் என்னும் சிறைச்சாலைக்குள் அடைப்பட்டுள்ளார்கள். அந்த விதத்தில், அப்படிப்பட்ட மனநிலையை உடையவர்களுக்கு இந்த தற்காலத்து வாழ்க்கையை கடந்து, ஒன்றுமே இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களுக்கு அது வித்தியாசமானது. நாம் காலத்தில் வாழ்ந்தாலும், நம்முடைய நம்பிக்கை நம்மை காலத்தை கடந்து, நித்தியத்திற்குள் அழைத்து செல்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகையில் உள்ள நம்பிக்கை நம்மை காலம் என்ற சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கிறது!

நம்பிக்கையின் ஊற்று

நம்பிக்கையை குறித்த நம்முடைய தொடரின் இப்பகுதியில், இந்த கடிதத்தின் ஆரம்பத்தில் நான் கேட்ட கேள்விக்கு பதிலை முன் வைக்க விரும்புகிறேன்: **எல்லா நம்பிக்கையையும் இந்து விட்டால், என்ன செய்வது?**

அந்த கேள்விக்கு பதில் கூற, நாம் கண்டடைய வேண்டிய முதல் சத்தியம் இதோ: தேவனுடைய அன்பு மட்டுமே, எல்லா நம்பிக்கையின் ஊற்றாகவும் இருக்கிறது. இந்த சத்தியத்தை, பவுல் 2 தெசலோனிக்கேயர் 2:16-17ல் வலியுறுத்துகிறார்.

> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவராக.

அவைகள் அழகான வார்த்தைகள் அல்லவா? இவ்வசனத்தின் வார்த்தைகளை நாம் தியானிக்கும் போது, ஐந்து முக்கியமான அம்சங்கள் வெளிவருகின்றன:

தேவனுடைய அன்பு. நாம் ஏற்கெனவே முன் வைத்ததை தான் முதல் சத்தியமாக இங்கு காண்கிறோம்: தேவனுடைய அன்பு தான் நம்பிக்கையின் ஊற்றாக உள்ளது. தேவன் நம்மை நேசித்த படியினால், நமக்கு "நித்திய ஆறுதலையும் கிருபையினால் நல்நம்பிக்கையையும்" தந்தார். பிரபஞ்சத்திற்கு பின் இருக்கும் இறுதி வல்லமை தேவனுடைய அன்பு என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவன் ஒரு தகப்பன், தேவனை நாம் தகப்பனாக அறியும் போது, இப்படிப்பட்ட நம்பிக்கை நமக்கு உண்டு - அது அவருடைய அன்பின் பரிசு. ஆண்டவருடைய மாற்றமில்லாத அன்பு மற்றும் உண்மையுள்ள திட நம்பிக்கையிலிருந்து அது தோன்றும்.

கிறிஸ்துவின் மூலம். இரண்டாவதாக, நம்பிக்கையின் ஊற்று, தேவனுடைய அன்பாக இருந்தாலும், அது இயேசு கிறிஸ்து மூலம் வருகிறது. பவுல், பிதாவாகிய நம்முடைய தேவனை மட்டுமல்ல, "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும்" அங்கே முன் வைப்பதால் நாம் இதை அறிந்திருக்கிறோம். தேவனிடமிருந்து வரும் அன்பு மற்றும் நம்பிக்கை, நம்முடைய வாழ்வினுள் வருவதற்கு இயேசு கிறிஸ்து தாமே ஒரே வாய்க்காலாக இருக்கிறார்.

கிருபையினால். நம்பிக்கையின் மூன்றாவது அம்சம் என்னவென்றால், அது ஒரு ஈவு. ஆனால் அதை எப்படி பெறுகிறோம்? கிருபையினாலே. தேவன் "நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் கிருபையாய்" நமக்கு கொடுத்தார் என்று பவுல் கூறுகிறார்.

கிருபையை சம்பாதிக்க முடியாது என்பதை தயவு செய்து மனதில் கொள்ளுங்கள். சம்பாதிக்கப்பட கூடிய எதுவும் கிருபை அல்ல. கிருபையினால் கிடைக்கும் ஈவுகளையும் ஆசீர்வாதங்களையும் விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே இந்த நம்பிக்கையை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் - அதை சம்பாதிக்க நீங்கள் முற்பட முடியாது. நீங்கள் பெற தகுதியுள்ளவர்களா, இல்லையா என்பதை தீர்மானிப்பதினால் அது வராது. ஏன் நம்பிக்கையாய் இருக்க வேண்டும் என்று பகுத்தறிவின் அடிப்படையில் நீங்கள் உங்களுக்குள் தர்க்கிப்பதினாலும் வராது. தேவனுடைய அன்பின் ஈவாகவே நாம் நம்பிக்கையை பெற முடியும் - அவருடைய கிருபையினால் அளிக்கப்படுகிறது.

காலத்தை கடந்து. நான்காவதாக, "நல்நம்பிக்கை" என்ற சொற்றொடரோடு, தேவன் நமக்கு "நித்திய ஆறுதலை" கொடுத்திருக்கிறார் என்று பவுல் கூறுகிறார். நான் இந்த வாக்கியத்தை பல முறை கூறியிருக்கிறேன், ஆனால் இதை மறுபடியும், மறுபடியும் சொல்வதினால் தவறில்லை: நம்பிக்கையுடன், காலத்தையும் கடந்து செல்லும் ஒரு ஆறுதல் வருகிறது.

நம்முடைய எதிர்ப்பார்ப்புகள், நம்முடைய வாஞ்சைகள், நம்முடைய திருப்திகள் இந்த குறுகிய காலத்திற்கு கட்டப்பட்டவைகள் அல்ல. "நித்திய" என்ற அவ்வார்த்தை மிகவும் ஆழமான, பெருக்கமான வார்த்தையாகும். "காலத்திற்கு கட்டுப்படாத, காலத்திற்கு உட்படாத, காலத்திற்கு முன் இருந்ததும், காலத்திற்கு பின் இருப்பதும்" என்ற அர்த்தம் அதற்கு உண்டு.

நித்திய நம்பிக்கை நம்மை காலம் என்னும் இவ்வலையின் கட்டுப்பாடிலிருந்து உயர்த்தி, வேறு தளத்தில் நிறுத்துகிறது - நாம் வாழக்கூடிய ஒரு நித்திய தளம். நமக்கு இந்த நம்பிக்கை இருப்பதால், நாம் இராஜாக்கள், ராணிகள் மற்றும் இராஜகுமாரர்களை போல் இப்பூமியில் நடைப்போட முடியும். நாம் இனி காலத்தின் அடிமைகள் அல்ல; நாம் தேவனுடைய கிருபையின் மூலம் அளிக்கப்பட்ட - நம்பிக்கையென்னும் ஈவினால் விடுவிக்கப்பட்டுள்ளோம்.

பரிசுத்தத்திற்காக. கடைசியாக, நாம் ஏற்கெனவே கவனித்த ஒரு குறிப்பு தான், ஆனால் அதை வலியுறுத்துவதற்காக அதை மறுபடியும் சொல்கிறோம் - நம்பிக்கையே நம்மை பரிசுத்த வாழ்விற்காக பெலப்படுத்துகிறது.

பவுல் நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையை குறித்தும் பேசி முடித்த பின்பு, தேவன், "உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவராக" என்று கூறுகிறார்.

நாம் உண்மையாய் இருப்போம்: ஒரு நம்பிக்கையற்ற நபர், பெலவீனமான நபராவார். அவருக்கு உண்மையான ஊக்கம் இல்லை. பாதை கடினமாகும் போது, விட்டுவிடாமல் பற்றிக்கொள்ள வைக்க அவனுக்கு அங்கு ஒன்றுமில்லை. அவன் விட்டுவிடுகிறான். அவன் கைகள் தளர்ந்துவிடுகின்றன, அவன் தோள்களை துலுக்கி "பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று கூறுகிறான். ஆனால், நாம் சொல்லும் நித்திய நம்பிக்கையை உடைய நபர் பலனும் உறுதியும் உடையவராக இருக்கிறார். கஷ்டம் மற்றும் நெருக்கத்தின் நேரத்தில் தான் அந்த நபர் பொறுத்திருப்பார். உறுதியாய் பற்றிக்கொள்கிறார். இந்த நம்பிக்கையின் மூலம் தேவன் அவருடைய இருதயத்தை பெலப்படுத்துகிறார்.

நித்திய நம்பிக்கை நம்மை காலம் என்னும் இவ்வலையின் கட்டுப்பாடிலிருந்து உயர்த்தி, வேறு தளத்தில் நிறுத்துகிறது - நாம் வாழக்கூடிய ஒரு நித்திய தளம்.

தெசலோனிக்கேயரின் இந்த பகுதியில் நாம் கற்றுக்கொண்ட ஐந்து குறிப்புகளை நான் மறுபடியும் சுருக்கமாக நினைப்பூட்டுகிறேன்:

1) தேவனுடைய அன்பு தான் நம்பிக்கையின் ஊற்றாகும்;
2) அது கிறிஸ்து இயேசுவின் மூலம் வரும்;
3) அது கிருபையினால் உண்டாகும் ஈவு;
4) அது நித்தியமானது;
5) பரிசுத்த ஜீவியத்திற்காக அது நம்மை பெலப்படுத்தகிறது.

வாழ விடுவிக்கப்பட்டவர்கள்

என்னுடைய இந்த போதனையை நிறைவுக்கு கொண்டு வர, நம்பிக்கையின் நித்திய தன்மையை வலியுறுத்தும் விதமாக, ரோமர் 14:7 9இல் உள்ள பவுலின் வார்த்தைகளை நான் தியானிக்க விரும்புகிறேன்:

> நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிப்பதுமில்லை. நாம் பிழைத்தாலும், கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

நாம் நமக்காக மட்டுமே வாழ்வதும் மரிப்பதுமில்லை. சுயத்தை மையமாக கொண்டிருப்பது, தனிமையாய் இருப்பதாகும் - நம்முடைய இந்த உலகமும் அநேக தனிமையான மக்களால் நிறைந்திருக்கிறது. சுயம் என்னும் சிறைச்சாலையில் அவர்கள் அடைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்காகவே வாழ்கிறார்கள்; அவர்கள் தனிமையில் மரிக்கிறார்கள்.

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி secretary@derekprince.in அல்லது அலைபேசி 9585538202 தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

<u>உங்கள் கவனத்திற்கு!!!</u>

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

ISSUE #018

இன்னும் தேவையா?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

பதிவு செய்க!

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்ளைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

அவர்களுக்கு எந்த எதிர்ப்பார்ப்புகளுமில்லை. வேறு எந்த நலன்களும் அவர்களுக்கு இல்லை, தங்களை தாண்டி அவர்களுடைய கவலைகள் செல்லாது. சுயம் என்னும் சிறைச் சாலையில் வாழ்கிறார்கள்.

ஆனால் கிறிஸ்து மூலமாக, நாம் இந்த சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெறுகிறோம்! நமக்கென்று நாம் பிழைப்பதுமில்லை, நமக்கென்று மரிப்பதுமில்லை என்று பவுல் கூகிறார். நாம் கிறிஸ்துவுக்காக வாழ்கிறோம். கிறிஸ்துவுக்குள் மரிக்கிறோம். "பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்." ஆகவே, மரணத்திற்கு நம் மீது உண்மையான ஆளுகையில்லை. அதில் நமக்கு எவ்வித திகிலுமில்லை. வாழ்வின் இன்னொரு உயர் தளத்திற்குள், அது நம்மை விடுவிக்கிறது.

உச்சக்கட்ட பிரச்சனைகள்

நாம் சந்திக்கக்கூடிய உச்சக்கட்ட பிரச்சனைகளை கிறிஸ்து ஏற்கெனவே தோற்கடித்துவிட்டார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் - அவை தான் மரணம் மற்றும் ஜீவன். ஜீவனும் அதற்கு பின்வரும் மரணத்தையும் கையாள முடியாத எந்த மதம், நம்பிக்கை அல்லது தத்துவத்தை பின்பற்றுபவர்களுக்கு, அந்த நம்பிக்கை முறை மனித தேவைகளுக்கு முற்றிலும் பயனற்றதாகவே உள்ளது, ஏனென்றால், நாமெல்லாரும் ஜீவனையும் சந்திக்கிறோம், நாமெல்லாம் மரணத்தையும் சந்திக்கிறோம். இயேசு மரித்து, மரித்தோரிலிருந்து உயிருடன் எழுந்து, உயிரோடிருப்பவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் ஆண்டவரானார் - என்ற இந்த சத்தியம், நம்மை சுயம், காலம் மற்றும் சுயசிந்தையிலிருந்து விடுவிக்கிறது.

நாம் நமக்காக வாழ்வதில்லை. நாம் கிறிஸ்துவுக்காக வாழ்கிறோம், நாம் மரித்தாலும் கிறிஸ்துவுக்காக மரிக்கிறோம். நம்மை ஏற்றுக்கொள்ள அவர் இருக்கிறார்; நாம் அவருக்கு சொந்தமானவர்கள். நாம் தேவனுடைய பொறுப்பாக மாறி விட்டோம். எல்லாவற்றையும் ஒழுங்கு செய்வது, எல்லாவற்றையும் வழங்குவது, நமக்காக எல்லாவற்றையும் நிர்வகிக்கிறது என்ற பாரத்தை நாம் சுமக்க தேவையில்லை. நம்முடைய வாழ்க்கை தேவனுடைய பொறுப்பாக இருக்கிறது.

சங்கீதம் 17:15ல் உள்ள சங்கீதக்காரன் தாவீதின் வார்த்தைகளை இறுதியாக பார்ப்போம். இந்த எதிர்ப்பார்பை அவர் மிகவும் அழகாக சாராம்சமாக கூறுகிறார்:

> நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.

இங்கே கல்லறையுட் கடந்து நிலைநிற்கும் ஒரு நம்பிக்கை இருக்கிறது. தாவீது, "நான் மரணத்தில் தூங்கினாலும், ஒரு நாள், ஒரு நொடிப்பொழுது வருகிறது, அப்பொழுது நான் விழித்தெழுவேன். நான் அவருடைய முகத்தை காண்பேன். அவருடைய நீதியை தரித்துக்கொள்வேன், திருப்தியும் அடைவேன்" என்று கூறுகிறார்.

திருப்தி! எவ்வளவு வல்லமையான வார்த்தை அது. நான் இப்போது கூறின வசனத்தை நாம் தியானிக்கும் போது, இதை எனக்கே மறுபடியும், மறுபடியும் சொல்லிக்கொள்வதை நான் அதிகம் விரும்புவேன்: "திருப்தி...திருப்தி...முழுமையான திருப்தி. நான் திருப்தியடைவேன்."

இது தான் என்னுடைய நம்பிக்கை. அது தான் வாழ்விலும் என்னுடைய நம்பிக்கை, மரணத்திலும் எனது நம்பிக்கை. அந்த நம்பிக்கை தான் என்னை காலத்திலிருந்தும், அதிர் அர்ப்பமான கலவைகள் மற்றும் எண்ணங்களிலிருந்தும் விடுதலையாக்கிற்று. என்னுடைய சிறுமை, என்னுடைய இயலாமைகள், என்னுடைய பலவீனங்கள் மற்றும் விரக்திகளிலிருந்தும் விடுதலையாக்கிற்று. அந்த சிறைச்சாலையில் நான் இப்போது அடைப்பட்டவன் அல்ல. என்னை விடுதலையாக்கினது என்ன? நம்பிக்கை! ஒ, அந்த நம்பிக்கைக்காக நான் எப்படி தேவனை துதிக்கின்றேன்!

நம்பிக்கையின் வார்த்தைகள்

இப்படி திருப்தி செய்யும் அந்த நம்பிக்கைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்த நீங்கள் என்னுடன் இணைந்துக்கொள்ள விரும்பலாம். ஆனால், ஒருவேளை, முன்பு சொன்ன நபர் போல, நம்பிக்கையற்றவராகவும் நீங்கள் உணரலாம். நீங்கள் பெலன ற்றும், வெறுமையுமாக உணருகிறீர்களா? "பிரயோஜனமில்லை" என்று உங்களுக்குள்ளேயே சொல்லிக்கொள்ளும் சத்தம் உங்களுக்கு கேட்கிறதா? நீங்கள் தனியாக இல்லையென்று நான் உங்களுக்கு உறுதி கூறட்டும். அது என்னுடைய நிலையாயிருந்த போது, என்னுடைய நம்பிக்கையற்ற நிலையில் தேவனை நோக்கி கூப்பிட்டேன், அவர் என் தேவையை சந்தித்தார்.

என்னுடன் இணைந்து ஜெபிக்க விரும்புகிறீர்களா? தேவனுடைய வார்த்தைக்கு நாம் இணைந்து செல்வோம், நாம் முன்பு தியானித்த வசனத்தின் அடிப்படையில் தேவனிடம் நம்முடைய ஜெபத்தை ஏறெடுப்போம்:

> என்னை விடுதலையாக்கக்கூடிய ஒரு நம்பிக்கையின் வாக்குதத்தத்திற்காக நான் நன்றி கூறுகிறேன், பிதாவே. அதை உம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். உம்முடைய வசனத்தை நோக்கி பார்த்து, விசுவாசத்தில் இப்போது அறிக்கை செய்கிறேன்: உம்முடைய அன்பே என்னுடைய நம்பிக்கையின் ஊற்றாக உள்ளது. இயேசு கிறிஸ்துவின் மூலம் அந்த நம்பிக்கை எனக்கு வருகிறது. அது கிருபையினால் எனக்கு உண்டான ஈவு. நம்பிக்கை நித்தியமானது; அது என்னை பரிசுத்த ஜீவியத்திற்காக பலப்படுத்தும். இந்த வார்த்தைகளை நான் சொல்லும் போது, நீர் என்னுடைய இருதயத்தில் புதிய நம்பிக்கையை ஊற்றுகிறதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன் ஆண்டவரே. என் தேவையை சந்திக்க, உம்மை, உம்மை மாத்திரமே நான் நம்புகிறேன். இந்த விடுவிக்கும் நம்பிக்கைக்காக நன்றி ஆண்டவரே. ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us

www.derekprince.in
admin@derekprince.in
Ph : 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

Derek Prince Ministries - India
www.derekprince.in